கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: பொறி.கே.பிரான், பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண்: நி.உ.2/ 1973/ 2023/ நாள்:13.12.2024

பொருள்: பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - திரு.க.சுந்தர் (பி.தே: 02.08.2002) இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.18/ தொ(ம) வே.க்யூ-1, நாள்: 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.33/ தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாடு (Q1)த்துறை/ நாள் : 08.03.2023.
3. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்: எஸ்2(1)/ 013818/ 2023/ நாள்: 29.11.2023.
4. தலைமைப்பொறியாளர், பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்: எஸ்.1(2)/ 2681/ 2023/ நாள்: 12.05.2023
5. தலைமைப்பொறியாளர், பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்: எஸ்.1(2)/ 2681/ 2023 (6981)/ நாள்: 11.12.2023.
6. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: நி.உ.2/1973 /2023/நாள்:14.12.2023
7. தலைமைப்பொறியாளர், பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடித எண்: எஸ்.1(2)/ 5814/ 2024/ நாள்: 11.11.2024.

*****

பார்வை எண். 1 முதல் 6 வரை காணும் அரசாணை மற்றும் செயல்முறை ஆணைகளின் படி, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ப.கணேசன், அலுவலக உதவியாளரின் மகன் திரு.க.சுந்தர் இளநிலை உதவியாளாராக இவ்வட்ட அலுவலகத்தில் 14.12.2023 பி.ப முதல் பணிமேற்கொண்டு பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண்.33/ தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாடு (Q1)த்துறை/ நாள்.08.03.2023 -ன் படி தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையிலான பணிநியமனம்) விதிகள் 2023 பணியில் இருக்கும்போது மரணமடைந்தவர் / மருத்துவ இயலாமையினால் பணி ஓய்வு பெறுபவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்த ஒருமித்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின் இணைப்பில் கண்ட பத்தி 16-ல் இந்த வகையான பணிநியமனம் வழங்கப்படுபவர்களுக்கு அப்பதவிக்குரிய நியமன அலுவலரே விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணியேற்ற ஒரு வருட காலத்திற்குள் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இணைச் செயலாளர், பொ.ப.து., சென்னை க.எண்: 2508/பணி 2 (1)/2024-1/ நாள்.23.07.2024 மற்றும் அரசு இணைச் செயலாளர்,பொ.ப.து.,சென்னை க.எண்.2508/ பணி 2(1)/2024-2/நாள். 23.07.2024 -ல் கடிதங்களில் 08.03.2023-க்கு பின்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட / செய்யப்படும் தனியர்களின் பணியினை அவர்களின் விதிகளின்படி அனைத்து தகுதிகளையும் பெற்றப்பின் அவர்கள் பணியில் சேர்ந்த ஓராண்டிற்குள் நியமன அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்யுமாறு, மேற்படி விதிகளில் விதி 17-ன் படி கல்வித்தொகுதி (எந்த ஒரு பதவிக்கும் பணி நியமனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தொகுதி தளர்த்தக்கூடாது) தவிர மற்ற தகுதிகளுக்கு விதித்தளர்வு தேவைப்படும் பணிவரன்முறை கருத்துருக்களை மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ப.கணேசன், அலுவலக உதவியாளரின் மகன் திரு.க.சுந்தர் இளநிலை உதவியாளாராக மேற்தெரிவித்த அரசாணைக்கு பிறகே இவ்வட்ட அலுவலகத்தில் 14.12.2023 பிற்பகலில் பணியேற்றுள்ளார். திரு.க.சுந்தர் இளநிலை உதவியாளருக்கான கல்வித்தகுதி பெற்றுள்ளார். தனியரது வயது குறித்த விதித்தளர்வு கருத்துரு அரசுக்கு அனுப்ப வேண்டிய நிலை எழவில்லை. எனவே, தனியாருக்கு அரசாணை எண்.33/ தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடுத்துறை/ நாள் : 08.03.2023-ல் வழங்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்பவும், அரசாணை எண்.2151/ பொ.ப.து/ நாள். 27.12.1988-ன் படியும் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன அலுவலர் செயற்பொறியாளர் என்பதாலும்,

தனியர் தற்சமயம் இவ்வட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதால் அலுவலக தலைவரான கண்காணிப்புப் பொறியாளரே விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் கருணை அடிப்படையிலான பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என பார்வை 7-ல் காணும் தலைமைப்பொறியாளர், பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ப.கணேசன், அலுவலக உதவியாளரின் மகன் திரு.க.சுந்தர், என்பவர் இளநிலை உதவியாளருக்கு தனியர் பணியேற்ற நாளான 14.12.2023 பிற்பகல் இவர்மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதால் இவர் பணியில் சோர்ந்த 14.12.2023 பிற்பகல் முதல் அரசாணை எண்.2151/ பொ.ப.து.,/நாள்: 27.12.1988-ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது

கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,
கட்டட (க&ப) வட்டம், திருவாரூர்-1

பெறுநர்
திரு.க.சுந்தர்,
இளநிலை உதவியாளர்,பொ.ப.து.,
கட்டட (க&ப) வட்டம்,
திருவாரூர்-01